தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர், தேதி: 8-8-2016
ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**ஒவ்வொரு நிமிடமும் மகிழ்ச்சியாக வாழ்வதே வெற்றி**
**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மகளிர் தினவிழாவில்**
**-சிறப்பு விருந்தினர் பேச்சு**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக நாட்டு நலப்பணித் திட்ட சார்பில் பல்கலைக்கழக அண்ணா அரங்கில் இன்று (8-3-2016) சர்வதேச மகளிர் தினவிழா நடைபெற்றது.

பாரத ஸ்டேட் வங்கி தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக கிளை மேலாளர் திருமதி. அன்னபூரணி கணேஷ்குமார் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். சத்தான உணவும், சமூக வலைத்தளங்களின் பாதிப்புகளுக்கு எதிரான விழிப்புணர்வும், தன்னம்பிக்கையும் பெண்களுக்கு அவசியம் என்றார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கல்வி இயக்ககத்தின் இயக்குனர் திருமதி. சாந்தி அவர்கள் தன் வாழ்த்துரையில் பெண்கள் ரத்த சோகை போன்ற நோய்களிலிருந்து விடுபட வேண்டும். நல்ல உடல் நலமே நல்ல மன நலத்தின் அடையாளம் என்றார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பயிர் மேலாண்மைத் துறை இயக்குனர் அவர்கள் பேசுகையில், பெண்கள் ஆண்களுக்கு இணையாக அனைத்துப் பணிகளும் செய்ய முடியும். அதற்கு ஆக்கமும் ஊக்கமும் அவசியம். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் பெண் இயக்குனர்களும், பெண் துறைத் தலைவர்களும் இதற்கு சான்றாக விளங்குகின்றனர் என்றார்.

திருவணந்தபுரம் மாவட்ட வன அலுவலர் திருமதி டி. உமா அவர்கள் தனது விழா சிறப்புரையில் தன் வாழ்க்கையே மாணவிகளுக்கு சிறந்த பாடமாக அமையும் என்றார். தமிழ்நாட்டின் பட்டுக்கோட்டையிலிருந்து ஒரு கிராமத்தில் பிறந்து வாழ்க்கைப் போராட்டங்களுக்குப் பிறகு சாதனைப் பெண்மணியாக உயர்ந்ததை கண்ணீர் மல்க நினைவு கூர்ந்தார். வாழ்க்கையில் படிப்பு மட்டுமே முக்கியமல்ல. வெற்றி பெற ஒவ்வொரு நிமிடமும் மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்று வலியுறுத்தினார். சரிவிகித வாழ்க்கை வாழ்வதே வெற்றிக்கான அடையாளம் என்று கூறினார்.

கோவை அரசு கலைக்கல்லூரி தமிழ் பேராசிரியை முனைவர். எஸ். பூங்கொடி அவர்கள் தனது உரையில் கிளாரா செர்கின் அவர்களால் உழைக்கும் மகளிர் தன் உரிமைகளை மீட்க பாடுபட்டு வெற்றி பெற்ற தினத்தை நினைவு கூறும் வகையில் மகளிர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. பெண்கள் வன்கொடுமைக்கு ஆளாக்கப்படுவதும், பெண்களுக்கு எதிராக இணைய குற்றங்கள் தடுக்கப்பட வேண்டும். பெண் கல்வி மற்றும் பெண்ணுரிமை பெண்களின் சாதனைக்கு வழிவகுக்கும் என்றார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் கு. ராமசாமி அவர்கள் தன் தலைமையுரையில் தமிழ்நாட்டில் முதல் பெண் மருத்துவர் டாக்டர். முத்துலட்சுமி அம்மையார், புற்றுநோய் மருத்துவமனை தலைவர் மற்றும் வீர மங்கை வேலுநாச்சியார் ஆகியோரை மாணவிகள் முன்னோடிகளாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்றார். வருங்காலத்தில் பெண்கள் சிறப்புப் பணிகளை ஏற்க வேண்டிய சூழல் ஏற்படும். அதற்கு தங்களை தயார் செய்து கொள்ள வேண்டும் என்றார்.

நாட்டு நலப்பணித்திட்டம் சார்பில் பொம்மனாம்பாளையம் ஆஷ்ரேய பால பவன் காப்பகத்திற்கு தேவையான பொருட்கள் துணைவேந்தர் அவர்களால் வழங்கப்பட்டது.

சமூகத்தில் சிறந்து விளங்கிய பெண்மனிகள் குறித்த கருத்துக்காட்சி, மற்றும் நாடகங்கள் போன்ற கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

நாட்டு நலப்பணித்திட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் திட்ட அலுவலர்கள் ஆகியோர் நிகழ்ச்சி ஏற்பாட்டை செய்திருந்தனர். விழாவில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக முதன்மை மருத்துவர் திருமதி. அருள்மொழி, பல்கலைக்கழக அலுவலர்கள் ஆசிரியர்கள் மற்றும் 400 நாட்டு நலப்பணித் திட்ட மாணவ – மாணவிகள் கலந்து கொண்டனர்.

முன்னதாக செல்வி. சுபாஷினி வரவேற்புரையும், இறுதியாக செல்வி. ரினி அல்போன்சியா நன்றியுரையும் வழங்கினர்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்